**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the **Morning Star** to:-
**The Manager,**
" Morning Star ",
Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 144 JAFFNA, FRIDAY, 20th JULY, 1984 No. 29

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*
**The Manager,**
' Morning Star ', Vaddukoddai.

## Maduram Kulandran Singing Competition 1984 — Prize Winners

| | 1st Place | 2nd Place | 3rd Place |
|---|---|---|---|
| *Under 6 Group* | Dilani Jeyakumaran<br>Karainagar Church | Dinesh Jeyakumaran<br>Karainagar Church | Ajith Poologasundaram<br>Pandateruppu Church |
| *Under 9 Group* | Angelina Rasiah<br>Vaddukoddai Church | Sujatha Muthurajah<br>Pandateruppu Church | Devadarshan Atputharajah<br>Karainagar Church |
| *Under 12 Group* | Milka Ratnasabapathy<br>Uduvil Church | Nishanthini Satkunam<br>Uduvil Church | Chandrayathana Karuna<br>Uduvil Girls College |
| *Under 15 Group* | R. Romela Jebadarshan<br>Uduvil Girls College | Kalayini Manickam<br>Pandateruppu Church | P. Subathira<br>Uduvil Girls College |
| *Under 18 Group* | Rajani Daniel<br>Vaddukoddai Church | Vimalini Nalliah<br>Karainagar Church | Amirtham Sellathurai<br>Uduvil Girls College |

*Under 6 Group* Consolation Prize Dorothy Perampalam

**Kandiah :-**
**Elizabeth Nallammah**

Born August 17th
Fondly Remembered on her Birthday

No space of time no lapse of years
Can dim the treasured past
A loving memory keeps it clear
Affection holds it fast.

ARULPOORANAM.

## English Teaching — Experts from India

*Dr. N. S. Prabha*, English Studies Officer of the British Council in Madras and *Dr. Esther Ramani*, Assistant Professor of the Indian Institute of Science in Bangalore are in Sri Lanka to conduct Seminars on *Communicational English Teaching*. The Seminars are sponsored by the Curriculam Development Centre of the Ministry of Education and the British Council, Colombo.

Communicational English teaching as opposed to the structured approach where the emphasis was on set patterns and rules has been tried out in India with learners in the age group 8 — 15 for five to six periods a week.

No elaborate visual aids are necessary say the experts, except " black board, chalk, paper and pencil ".

The new approach emphasises "a pre-occupation with language through activity and the necessary struggle with language which such activity demands ".

The problem - solving *communicational approach*, say the Experts, could be related to any subject, Mathematics, History, Geography or Science.

### Church News around the world

O *Papal Visit to the W.C.C.*: After almost 15 years since Pope Poul vi came to the head quarters of the W.C.C. Pope Paul 11 made the second visit there. The occasion was marked by a Special Service at the Eccumenical Centre Chapel attended by five hundred peopel. The Pope and the General secretary addressed the gathering. It was also significant in that a joint statement drafted by Cardinal Willebrands and Dr. Philip Potter was issued.

O *Fire in the Cathedral*: The 500 year old York Minster, considered to be the largest Medival Cathedral in England caught fire in the early hours of morning. It is reported that 150 policemen and firemen jointly worked to bring the fire under control. The damage is reported to be very minimal. The English people as a whole have responded to this very well by sending in their contributions for its renovation. The Most. Rev. Robert Runcie, the Archbishop of Canterburry visiting the scene has said, "But the Minster will rise again".

O *New General Secretary of the W.C.C.*: Emile castro, 57, of Uruguay, was elected to the post (12 July) by the 150-member W.C.C. Central Committee meeting in Geneva. Until the end of 1983 Castro was Director of the W.C.C. Commission on wolrd Mission and Evangelism.

O *Dr. Peale Honoured*: The Rev. Dr. Norman Vincent Peale ef the famous Marble Collegiate Church in New York was declared ' Clergyman of the Year ' by Religion in Media. Dr. Peale received the organizations Gold Angel Award for his ' services to God and Mankind '.

— *S. S. A.*

### *Obituary*

**Mr. J. M. Rajaratnam**

The death of *J. M. Rajaratnam* eldest son of the late Mr. E. J. Rajaratnam C C S. occurred on 16-7-84. Mr. Raja ratnam, after retirement from the Price Control Department was Secretary first of Mcleod Hospital, Inuvil and later of the Green Hospital Manipay — both of which Mission institutions had the benefit of his organisational skill, combined with his initiative and drive He was also a person of musical talents ( vocal ) and was sought after for solos in many of our special Church services

The Funeral Service was held at his residence at Racca Lane, Chundiculi. The Ven. Sam Horshington officiated assisted by Rev. Sevak Sam Alfred and Rev. J. Sarvanandan. Mr. Sam Sathaseevan paid a tribute.

The concluding Prayer and Benediction was offered by the Rt Rev. D. J. Ambalavanar. The remains were interred at the St James Church burial grounds.

He leaves behind besides his wife, Rasamalar, ( Staff Vigneswara Vidyalaya, Nallur ), and five children. Mr. Jimmy Rajaratnam, Attorney at Law, Jaffna, is one of his brothers and Mr A. Rajasingam, Vice-Principal, Jaffna College is his brother-in-law.

* * *

**Mrs. Kirupai Hensman**

We regret to record the death which occurred on 6-7-84 of *Kirupai Hensman*, wife of Mr. Victor Hensman, retired Principal of Vasavilan Madya Maha Vidyalaya and herself a retired teacher of the Holy Family Convent, Jaffna. The funeral Service was held at residence at Forest Office Lane, Chundieuli on 7-7-84. The remains were iuterred at the Koddady burial grounds ( Pentecostal Sectioon ).

## Tea-drinkers in Sri Lanka

Tea-drinkers who paid Rs. 29 - 48 for a kilo of tea in January 1983, have paid as much as Rs. 71 . 26 from January this year — a marked increase of 141.7 per cent.

The total domestic consumption of tea in Sri Lanka according to the Tea Board is some 28 million kilos of Tea per year. The per capita consumption is about 130 grams per month or 1 . 56 kilos per year. For a family of four members ( making allowance for visitors) about 600 grams of tea are needed for a month.

## Institute for Evangelism and Lay Training

A full day Seminar on

### "Saivite Hinduism in Jaffna"

by

**Rev. D. R. Ampalavanar**

on

**Saturday, 11th August, 1984**
**(from 8.45 a. m. to 3.30 p. m.)**

at

The Christa Seva Ashram

Lunch and Tea will be served

All are cordially invited.

S. S. ARULAMPALAM,
Convenor.

## IN MEMORIAM

IN AFFECTIONATE MEMORY OF

**Rose Ariyamalar Winslow - Wijaratnam**
**Nee Barr-Kumarakulasinghe**

Departed: 1 August 1983

She did him "good and not evil all the days of her life" and not one good thing did she withhold.



Mr. N. Selvaratnam, Internation Accountant, Jaffna, had a Thanks-Giving Service at his residence, No. 29, 2nd Cross Street, Jaffna, on Sunday the 22nd instant, which happens to be his seventy second Birthday and completion of forty six years of professional practice.

He is the Auditor of the Diocese and other Mission Institutions since 1939. He has maintained the high sense of professional etiquette.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 144 ] 20-7-1984 [ இதழ் 29

## இன்றைய தேவை இடைவிடாது செபிப்பதே!

கடந்த ஆடிமாதம் தமிழ்மக்களுக்கு எதிராக நடைபெற்ற கலவரத்தின் ஓராண்டு நிறைவையொட்டி, அகிம்சை முறையில் தங்கள் எதிர்ப்பை உண்ணாவிரதம் சத்தியாக்கிரகம் மூலமாகக் காட்ட தமிழ்த் தலைவர்கள் ஒழுங்கு செய்து வருகின்றனர்.

இதே சமயத்தில், கலவரத்தைத் தூண்டும் முயற்சிகள் எந்தக்கோணத்திலிருந்து வந்தாலும் அதனை முறியடித்துச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதென தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

எனவே இன்றைய சூழ்நிலையில் உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றை நடத்துவது ஞானமான செயலாகுமாவென பல அரசியல் அவதானிகள் கேட்கின்றனர். 1977 க்குப்பின் குறிப்பாகத் தமிழ் மக்கள் அடைந்த இழப்புக்களும் வேதனைகளும் உலகமே அறியும். ஆகவே மேலும் தமிழ்மக்களுக்குத் துன்பங்கள் விளைவிக்கத்தக்க வாய்ப்புக்களை, நம்மை பூண்டோடு அழிக்கக் காத்திருப்போர்க்குக் கொடுக்கப்படாது. இதனை நம் தமிழ்த் தலைவர்கள் உணர்வார்களென நம்புகிறோம்.

அகிம்சை முறையில் எதிர்ப்பு இயக்கங்களை நடத்துவதாயிருந்தாலும், இன்றைய சூழ்நிலையை நாம் கவனிப்பது அவசியம், வன்செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நமது இளைஞர்கள் நாள்தோறும் விசாரணை என்றி சாட்டில் கைது செய்யப்படுவதை நாம் காண்கிறோம். எங்கும் பதட்டநிலை, பயங்கரம் சூழ்ந்துள்ள இச்சமயத்தில், நம் தமிழ்த் தலைவர்கள் நன்றாக ஆலோசித்து இறைவனின் துணையுடன் செயற்படவேண்டியது அவசியம்.

அகிம்சை முறை இயக்கங்கள் மிக்க ஆன்மிக ஆற்றல் வாய்ந்தவை. இந்த முறையைக் கடைப்பிடித்துத்தான் இந்திய நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்தி தியாகத்துக்கு மக்களை ஆயத்தப்படுத்தி, நாடு விடுதலைபெறச் செய்தார் காந்தி மகாத்மா. ஆயினும் அடிக்கடி இவ்வியக்கத்தில் ஈடுபட்டோர் வன்செயலில் இறங்கினர். ஒரு முறை சத்தியாக்கிரகத்தைத் தொடக்கிவைத்த மகாத்மா, அது வன்செயலுக்கு வழிவகுத்ததைக் கண்டு, உடனே அதனை நிறுத்தினர். சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் ஏற்ற பக்குவநிலையை அடையாவிட்டால், அதன் விளைவுகள் வன்செயல்களில்தான் முடிவடையும் என்பதை, இந்திய சுதந்திர வரலாற்றில் நாம் காண்கிறோம்.

அன்று இந்தியாவை ஆண்டுவந்த பிரிட்டிஷ் அரசு, நாகரிகமுள்ள அரசாயிருந்ததால், காந்தயடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்திற்கு மதிப்புக் கொடுத்தது. ஆனால் இலங்கையில், 1956 இல் தமிழரசுக் கட்சியினர் சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு நடைபெற்றதை நாம் அறிவோம். அன்று நடைபெற்ற உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டோரைத் தாக்கித் துன்புறுத்தியதுமன்றி, அதன்பின் அம்பாறையிலும் நாட்டின் வேறு பல பகுதிகளிலும் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டனர். 1961 இல் வடகிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் இராணுவத்தின் மூலம் அன்றைய அரசு முறியடித்தது.

இருந்தும், சத்தியாக்கிரக இயக்கத்தினூடாக, ஈழத்தமிழரின் நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக, ஓரளவு இவ்வியக்கம் உதவியது என்பதை நாம் மறுக்கவில்லை. சிலர் வன் செயல்மூலம் தம் எதிர்ப்பைக் காட்டுகின்றனர். இம்முறையிலும் பார்க்க அகிம்சை முறையில் எதிர்ப்பைக் காட்டுவதே சிறந்தது. ஆயினும் இன்றைய சூழ்நிலையில் இது பயங்கரவிளைவுகளை வருவிக்கும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும். இதனைச் சிந்தியுங்கள்.

இன்றைய தேவையென்ன? இறைவனின் துணையின்றி, நாம் தமிழ் மக்களுக்கு ஏற்ற செயல்களைச் செய்யமுடியுமா? அவர் துணையை செபத்தின் மூலம் நாடுங்கள். நம்மை எதிர்க்கும் அரசாங்கத் தலைவர்களுக்காக செபியுங்கள். நம்மை எதிர்க்கும், பெரும்பான்மை மக்களின் மனமாற்றத்திற்காக செபியுங்கள். சிங்கள மக்களில் பலர், தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்குக் கூடிய விரைவில் அரசியல் தீர்வுகாண வேண்டும், என்று தமிழ்மக்களின் நலனுக்காக முயற்சிகள் எடுக்கின்றனர். அவர்களுடன் நம்தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் அன்பை வளர்க்கும் வழிவகைகளைக் காண வேண்டுமென்றும் இறைவனை இறைஞ்சவேண்டும். இறைவனை ஒருபுறம் தள்ளிவிட்டு நமது ஞானத்தால், திறமையால் வேண்டிய காரியங்களை நடத்தலாமென எண்ணுவது தவறு, ஆகவே, இடையறாது செபியுங்கள். இறைவனின் செயல்களைக் கூடிய விரைவில் நாம் காண்பது நிச்சயம்.

## கிறிஸ்தவ கல்வி நோக்கங்கள்

### பொது நோக்கு:

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் உயிருள்ள விசுவாசத்தைக் கிறிஸ்தவருக்குள் பிறப்பிக்கச் செய்வதே கிறிஸ்தவ கல்வியின் தலையாய கடன்.

### தனி அம்சங்கள்:

1 பெரியோரும் சிறியோரும் தம் வாழ்க்கையின் அனுபவங்கள் ஊடே, கடவுள் பிரசன்னத்தின் உண்மையை உணர்ந்து, அவருடன் தனி உறவு கொள்ள ஏதுவான உதவியைக் கிறிஸ்தவ கல்வி அளிக்க முயலும்.

2. கிறிஸ்துவின் வாழ்க்கை போதனை முதலியவற்றை விளங்கி, மதித்து, இயேசுவை மீட்பரும் ஆண்டவருமாக அனுபவத்தில் காணவும், அவரில் விசுவாசம் பூண்டு, அன்றாட வாழ்க்கையிலும் நடத்தையிலும் அதனை வெளிப்படுத்த கிறிஸ்தவ கல்வி உதவ முயலும்.

3. மக்கள் கிறுஸ்தவ பண்புள்ளவர்களாய் தொடர்ந்து வளரக் கிறிஸ்தவ கல்வி உதவும்.

4 மக்கள் கடவுளைத் தந்தையாகவும், உலக மக்கள் அனைவரையும் உடன் பிறந்த சகோதரராகவும் பாவித்து, மதிக்கக் கூடிய உயரிய சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டுமென்னும் ஆவலையும், அதற்குத் தேவையான திறமை, மனநிலை முதலியவற்றையும் உருவாக்க கிறிஸ்தவ கல்வி முயலும்.

5 மக்கள் திருச்சபையில் பயனுள்ள உறுப்பினராக அமைந்து செயலாற்றி, தேவையான மனநிலையையும் திறமைகளையும் உருவாக்க கிறிஸ்தவ கல்வி முயலும்.

6. மக்கள் வாழ்க்கை, படைப்பு ஆகியவற்றைப் பற்றிய கிறிஸ்தவ விளக்கத்தை அறிந்து கொள்ளவும், அதில் கடவுள் திட்டமும் நோக்கமும் அடங்கியிருப்பதைக் காணவும், கிறிஸ்தவ கல்வி உதவும்.

7. மக்கள், மனுக்குலத்தின் ஆன்ம அனுபவங்களில் பங்கடையவும், திருமறையில் அடங்கியுள்ள அனுபவங்களைத் தற்கால அனுபவத்திற்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தவும் கிறிஸ்தவ கல்வி உதவும்.

8. மக்கள், கிறிஸ்தவ குடும்பத்தின் முக்கியத்துவத்தை அறிந்து, இதில் பலனளிக்கக் கூடிய அங்கமாக அமைந்து, அதின் வாழ்வில பங்குபெறத் தேவையான திறமையையும் மனநிலையையும் உருவாக்க கிறிஸ்தவ கல்வி முயலும்.

* இவற்றில் 1-3 - மனிதன் கடவுளுடன் கொள்ளும் தொடர்பைச் சீர்ப்படுத்தி அமைக்க முயலும்.

* அடுத்த 4-8-மனிதன் மனிதனுடன் கொள்ளும் தொடர்பைக் கடவுள் கிறிஸ்துவில் காட்டிய நெறிக்கொப்ப அமைக்க முயலும்.

### வேறு நோக்கங்கள்:

1. கடவுள் தம்மை பிதா, குமாரன், தூய ஆவியானவர் என வெளிப்படுத்தினார். இவற்றில் மக்கள் வளரவேண்டும்.

2. இயேசு கிறிஸ்துவை தம் மீட்பராக ஏற்று, தம் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும், அவரை ஆண்டவராக ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

3 கடவுளின் செயலுக்கு மறுமொழி—வழிபாடு, வேதம் கற்றல், சாட்சி பகர்தல், சேவை புரிதல் ஆகியன

திருச்சபையின் சூழ்நிலையில் நடைபெறும் கூட்டு முயற்சிகளில் பங்கடைந்து, அவரில் விசுவாசத்தையும் அன்பையும் செலுத்த வேண்டும். இதன் விளைவாக, மக்கள் கடவுளின் பிள்ளைகளாக முழு வளர்ச்சியை அடைய ஏதுவாகும்.

இவ்வகை வளர்ச்சியை மக்களில் காண ஆவியானவரின் உதவியால் கிறிஸ்தவ கல்வி முயலும்.

### சமயக்கல்வி ஆசிரியருக்குரிய அடிப்படை விதிகள்:

1. சொல்லிவிட சாதனையே சிறந்த போதனாமுறை.

2. கிறிஸ்துவுக்குள் சொந்த மீட்பின் அனுபவங்கள் உள்ளவர்களே, மற்றவர்களை அத்தகையதொரு அனுபவத்திற்குள் கொண்டுவரவேண்டும்—முடியும்.

3. ஆசிரியர் தாம் கற்பிப்பதற்குரிய வேதப்பகுதிக்கு மேலாகவே அறிந்திருக்க வேண்டும். மாணவர்களைவிட அதிகம் அறிந்திருத்தல் நல்லது.

4. திருமறையை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆசிரியர் வேதத்தைத் தனக்கு உரிமையானதாக்காவிடின், மற்றவர்கட்கு அதனை இன்றியமையாததாக்க அவரால் முடியாது.

5. மாணவர்களைத் தம் சொந்த முயற்சியால் அறிஞர்களாக்க ஆசிரியரால் முடியாது. ஆயினும் ஆண்டவரோடு ஒன்றிப் பணிசெய்து, மாணவர்கள் தம் ஆத்மீக அறிவில் வளர உதவ வேண்டும்.

6. ஆசிரியர், தாம் கற்பிக்க இருக்கும் மாணவர்களின் ஆர்வம், தேவை, புரிந்துகொள்ளும் சக்தி—இவைகளை அறிந்துகொள்ளவேண்டும்.

7. மாணவர்கள் தாமாகச் சிந்திக்கத்தக்கதாக ஆசிரியர் அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். கற்றுக்கொள்வதில் உற்சாகத்தோடு ஆர்வம் காட்ட அவர்களை வழிநடத்தவேண்டும்.

8. ஆசிரியர், தம் உணர்ச்சிகளில் இளமையாகவும் (மாணவர்களோடு சமமாகப் பழகுபவராகவும்), பண்பாடு (இனிய குரலும் சுபாவமும்) உள்ளவராகவும், இனிமை, இரக்கம், அமைதி, சமயோசித அறிவு உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். பெருமையின்றி தாழ்மையுள்ளவராகவும், ஆண்டவரின் உடன் ஊழியராகவும் இருத்தல் வேண்டும்.

9. அனைவரும் புரிந்துகொள்ளக் கூடிய எளிய, பொதுவான சொற்களையே ஆசிரியர் கையாள வேண்டும்.

10. தாம் கற்பித்ததில் எந்த அளவுக்கு மாணவர் நினைவில் பதிந்துள்ளது? அதை அவர்கள் தம் வாழ்வில் எவ்வாறு பயன்படுத்துவார்கள்? என்பதிலேயே ஆசிரியர் கரிசனையாயிருத்தல் வேண்டும்.

— D. R. A.

## இல்லத்தில் கிறிஸ்தவன்

மக்களை மயக்கும் முறையில் கவர்ச்சியுடன் பேசவும், இனிமையாகப் பாடவும் நான் அறிந்திருந்தும், என் இல்லத்தில் அடி வைத்தவுடன் 'உணவு பிந்தியதேன்?' என் உடையை ஏன் 'ஐயர்ன்' பண்ணவில்லை? என இரைந்து விழுந்தால், என் வாழ்வின் அன்பேது? நான் வெறும் ஓட்டைக் கலசம்!

'கடவுளின் செய்தியை எடுத்து இயம்புவதில் இணையற்றவன்!' ,பக்தியின் பெருக்கால் மலைகளையும் இடம்மாறச் செய்யும் வல்லவன்!' எனப் பலவாறு மக்கள் என்னைப் புகழ்ந்தாலும், என் இல்லத்தில் ஏங்கி நிற்கும் உள்ளங்களின் உணர்வை மதிக்கும் பண்பு எனக்கு இல்லாது போனால். என்னால் யாது பயன்?

வறியவரை வாழவைக்கும் வள்ளலாக நான் இருந்து, என் உடல் சுகம் தேடாது வருந்தி உழைத்துப் பலர் பாராட்டை நான் பெற்றாலும். இல்லத்துள் நுழைந்தவுடன் பகலவன் கண்ட அல்லியாக சூம்பிப்போய், எடுத்ததற்கெல்லாம் சீறி விழும் சிறுத்தையாக நான் மாறினால்—என்னை நேசிக்கும் மனைவி மக்களுக்கு உதவுவதில் உயர்வு காணாவிட்டால்—என்னால் யாது பயன்?

அன்பு பொறுமையை இழக்காது. மாறாக இரக்கம் காட்டும். அன்பு அழுக்காறு கொள்ளாது. சுய விளம்பரம் செய்யாது. பொய் வேடம் தரியாது.

அன்பு ஒரு போதும் பிறரை மனம் வருந்த வைக்காது. தன்னலனை நாடாது. பழிவாங்கத் துணியாது. நடந்து விட்ட தவற்றை எண்ணி வீணாக வருந்தாது. பிறர் குறையைப் பெரிதுபடுத்தி மகிழாது. நல்லதையே பாராட்டி மகிழும்.

அன்பு துக்கத்தை வெளிக்காட்டாது. நம்பிக்கையைக் கைவிடாது, எப்போதும், யாருடனும் மகிழ்ச்சியாகப் பொறுமையுடன் பழகும்.

உண்மையான கிறிஸ்தவனை அவன் இல்லத்தில்தான் காணலாம். வெளிவாழ்க்கையிலும், சேவையிலும் பகட்டுக்கு இடம் உண்டு. இல்லத்தின் அந்தரங்கச் சூழலில் பகட்டும் பறந்தோடிப் போகும். இங்கே வாழ்வில் நீங்காத நித்திய தேவைகளுக்கு வழி காண முயலும்போது, அன்பின் நெறி கடைப்பிடிப்பவனே கிறிஸ்தவன். அவன், வீட்டில் உள்ள அடுத்தவரைத் தான் பெரியவன் எனக் கருதமாட்டான். தன் இல்லத்தில், அன்பின் அடிப்படையில், நம்பிக்கையை வளர்த்து வருவான்.

## பூமியில் அற்பமானவை நான்கு!

பூமியில் அற்பமானவை நான்கு உண்டு. ஆனால் அவையே ஞானிகளினும் அதிக ஞானமுள்ளவை அவை।

(1) அறுவடைக் காலத்தில் தமக்கு உணவைச் சேகரிக்கின்ற அற்ப பொருளாகிய எறும்புகளும்,

(2) பாறையின் மேல் தன் படுக்கையை அமைக்கின்ற பலமற்ற பிராணியாகிய முயற் குட்டியும்,

(3) அரசனில்லாமலே அனைத்தும் கூட்டம் கூட்டமாய்ப் புறப்படுகின்ற வெட்டுக்கிளியும்,

(4) கையால் பிடிக்கக் கூடுமானதும், அரசனுடைய வீடுகளிலுமே வாழ்ந்திருப்பதுமான பல்லியுமாம்,

—பழமொழி ஆகமம், 30:24-28

## உணர்ந்திடுவாய் ஆண்குலமே!

பாதையிலே செல்லுகின்ற பாவையரைப் பார்த்துப்
பல்லிழித்தும் சொல்லெறிந்தும் நிற்கும்நிலை தவிர்த்து
அன்னவரைச் சகோதரராய் மனதினிலே நினைத்துப்
போற்றுகின்ற அந்தநிலை வந்திடாதோ ஆண்குலமே.

தலைமுடியைப் பாவையர்போல் வளரவிடுங் கோலம்
அது மேல்நாட்டு நாகரிகந் தந்த ஒரு மோகம்
தமிழ்ப் பண்பாட்டை மறந்துவிட்டால் நன்மையுண்டோ பாரும்
அகன்றிடுமோ இந்தநிலை உம்மைவிட்டுக் கூறும்.

கற்றகல்வி உத்தியோகம் பார்க்கத்தானே உதவும்
காடுவெட்டிக் கழனியாக்க அது உதவிடாதோ சொல்லும்
வேலைதேடி அலையும்நிலை என்றுதானே மாறும்
இதை ஆழ்ந்துகொஞ்சம் சிந்தித்துத்தான் பாருமே நீர் நாளும்

ஆடைகளை மாற்றுவதுபோல் பாவையரை மாற்றும்
ஆசைவார்த்தை கூறிப் பேதையரை மயக்கும்
கணப்பொழுதில் காரிகையாள் காதலையே மறக்கும்
கோலமது மாறிடாதோ கூறிடுவீர் என்க்கும்.

பணமதனைச் சீதனமாய்ப் பெண்ணிடத்தில் பறிக்கும்
நிலைகூட மாறிவிட்டால் பெண்மை அதை வியக்கும்
கவலையுறுங் கன்னியர்க்குப் புதுவாழ்வு ஒன்று பிறக்கும்
இதை ஆண் உணர்தல் வேண்டும் அது எனது ஒரு விருப்பம்

புகைபிடித்தும் பணத்தைக் கரியாக்கித்
திரியுமந்தத் தீயசெயல தனையே நீரும் மாற்றிப்
பாசம் அன்பு பற்று நாளும் குடும்பத்திலே செலுத்தி
வாழும்நிலை உணர்ந்திட்டாலே மனதில் நிலவும் மகிழ்ச்சி.

கவிபுனைந்து ஆண்குலத்தை இகழ்வதல்ல என் நோக்கம்
அவர் திருந்திவிட்டால் என்ற எதிர்பார்ப்பே அதன் தோற்றம்
செவிமடுக்கும உள்ளங்களில் பிறக்கவேண்டும் திடீர் மாற்றம்
அதுவேதான் அவரிடத்தில் நான்விடுக்கும் விண்ணப்பம்.

தவறுசெய்யா மனிதர் உலகில் இருப்பதில்லைத்தானே
ஆனால் தவறு என்று தெரிந்திழைத்தல் தீதே
உணர்விருக்கும்போதே உண்மைநிலை உணர்தல் நன்றே
இதை உணர்ந்திடுவாய் ஆண்குலமே சுயநினைவை இழக்குமுன்பே.

— நன்றி: கவிதைத் தொகுதி: செல்வி கி. மங்களராணி

## ஒரு மதியீனம்!

கீழ்க்கண்டவாறு எனக்கு அடிக்கடி கடிதங்கள் வருகின்றன:

'மனித வர்க்கத்தை ஆசீர்வதித்து நாங்கள் சமாதான ஜீவியம் செய்ய இரக்கம் செய்யும் கர்த்தாவே!'

'மேற்கண்ட ஜெபத்தை எழுதுபவர் ஒன்பது பேருக்கு ஒன்பது நாளில் அனுப்பி உலகம் முழுவதும் இதைப் பரவச்செய்ய வேண்டும். ஆதலால் இதை அனுப்பியவருக்கு ஒன்பது நாளில் நல்ல செய்தி கிடைக்கும். கஷ்டத்திலிருந்து விடுபடுவார்கள். உங்கள் பெயரை எழுதவேண்டாம். யார் சந்தோஷமாக இருக்க விரும்புகிறீர்களோ அவர்களுக்கு இந்த நற்செய்தியை எழுதி அனுப்புங்கள், இது ஓர் அமெரிக்கரால் தொடங்கப்பட்டது. இதை அனுப்பிய ஒன்பது நாளில் உங்கள் மனம் சந்தோஷத்தால் நிறையும். இதை விளையாட்டாகவோ அல்லது நகைப்பாகவோ எண்ணக்கூடாது. அப்படி நகைத்தால் துன்பம் விளையும். இது கிடைத்தவுடன் அனுப்பியதால் விக்டோரியா என்னும் அம்மாளுக்கு ரூ. 2000 கிடைத்தது. நெல்சன் என்பவர் இதை அலட்சியமாய் எண்ணி அனுப்பாததால் தன் ஒரே மகனை இழந்தார். ஆகையால், சந்தோஷமாய் இதை அனுப்பினால் மிகுந்த பலனை அடையலாம். இப்படிக்கு, வேதம் சொல்லுகிறது.

இத்தகைய கடிதங்கள் அடிக்கடி எனக்கு வருகின்றன. அனுப்புகின்றவர்கள் நான் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்ற நன் மனத்துடன் அனுப்புகிறார்களோ, அல்லது யாருக்கேனும் அனுப்பாவிட்டால் நமக்கு ஆபத்து வந்துவிடுமே, ஆகவே அவனொருவன் கிடக்கிறானே அவனுக்கொன்று அனுப்பிவிடலாம் என்று அனுப்புகிறார்களோ, அல்லது இவ்வாறு அனுப்பினால் 'மணமலரி'ல் ஏதாகிலும் இதற்கு விளக்கம் வராதோ என்ற ஆவலுடன் அனுப்புகிறார்களோ, அறியேன். நான் என்ன, தென்னிந்தியத் திருச்சபையிலுள்ள கண்காணியார் (அத்தியட்சர்) ஒருவரும் தமக்கு இத்தகைய கடிதங்கள் வருவதாக என்னிடம் சொல்லியிருக்கிறார்!

இத்தகைய மதியற்ற ஜெபக் கடிதங்கள் இப்போதல்ல நான் சிறுவனாகப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தபோதே எனக்கு வந்ததுண்டு. இந்தக் கடிதங்களுக்கு நான் அப்போது அஞ்சியதும் இல்லை; எவருக்கும் பிரதிகள் எடுத்து அனுப்பியதும் இல்லை; நண்பர்களிடம் சொல்லி நகையாடுவேன். இப்போது அத்தகைய கடிதங்கள் எனக்கு வரும்போது ஒருவித எரிச்சலும் அருவருப்பும் அடைகிறேன்.

இரவு நேரத்தில் தெருக்கோடியிலுள்ள ஒரு நாய் குரைத்தால் மற்ற நாய்களெல்லாம் குரைக்க ஆரம்பித்துவிடும். என்ன நடந்தது என்று தெரியாமல் வெறும் பயத்தினாலேயே அவைகள் குரைத்து ஊளையிடும்.

யாரோ ஒரு பரியாசக்காரன் என்றோ ஒரு நாள் சரியான ஒரு வஞ்சக விளையாட்டைத் தொடங்கியிருக்கிறான், அவனுடைய (அல்லது அவளுடைய) பரிகாசத்துக்கும் பகடிக்கும் இன்றும் இரையாகிக் கொண்டிருக்கின்றார்களே நமது சகோதர சகோதரிகள்! எழுதியனுப்புகிறவர்கள் தங்கள் பெயரை அதில் தெரியப்படுத்தக் கூடாதாம். பெயரை எழுதினால் குட்டு வெளிப்பட்டுவிடும்! என்றோ இந்த விளையாட்டுக்கு முடிவு ஏற்பட்டிருக்கும். அமெரிக்காவில் இந்த விக்டோரியாவையும் நெல்சனையும் யார் தேடிப்பிடித்து உண்மையை அறியப்போகின்றீர்கள்? ஒரு முறம் மண்ணை அள்ளி வைத்துக் கொண்டு இதில் நூறு கோடியே அறுபத்தெட்டு லட்சத்து மூவாயிரத்து அறுநூற்று ஒன்பது 'மணல்கள்' இருக்கின்றன என்று சொன்னானும் ஒருவன். 'அது எப்படி? நீ சொல்வது பொய்' என்றானும் மற்றவன். பொய்யா, 'சந்தேகமிருந்தால் எண்ணிப் பார்த்துக் கொள்' என்றானும் அந்தப் பொய்யன். இப்படிப்பட்ட கதைதான் இந்த ஜெபக்கதையும்

இத்தகைய கடிதங்களை எழுதுவதால், எழுதுகின்றவர் முதலாவது தம்மை மதியற்றவர் என்பதை நிரூபித்துக்கொள்ளுகிறார்; ஒன்பது பேருக்கு இந்தக் கடிதத்தை எழுதுவதால வீணாக நேரச் செலவும பணச் செலவும ஏற்படுகின்றன; கடவுளுடைய பேரைச் சொல்லித் தம்மையும் உலகத்தையும் வஞ்சிக்கிறார். எனவே இச்செயலை விட்டொழித்துவிடுக.

செய்திச் சிதறல்

### வண. பிதா திஸ்ஸபாலசூரியா குழு யாழ். வருகை

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து, தென்பகுதி மக்களுக்கு விளக்கிக் கூறி நாட்டின் அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் வண. பிதா. பாலசூரியா தலைமையில் சமாதானக் குழுவொன்று கடந்த திங்கள் 16ம் திகதி வந்துள்ளது.

### ஐக்கிய சமய நிறுவனம்

இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளின் கூட்டம் இவ்வாரத்தின் முதற் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது, இதில் உரையாற்றிய ஞானவாச தேரோ பேசுகையில், "இங்குள்ள நிலைமையை நேரில் அறிய வந்திருக்கும் எங்களுக்கு மக்கள் நடந்தவற்றை நேரில் அறிவிக்க முன் வரவேண்டும்" என்றார். பேராயர் அம்பலவாணர் பேசுகையில், சமயம் மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கே உதவ வேண்டும் மக்களைப் பிரித்து வைப்பதற்குச் சமயத்தைப் பயன்படுத்தப்படாதெனக் கூறினார்.

### "தமிழில் இறைஞ்சுவதை இறைவன் விரும்புவான்"

கடந்த வாரம் யாழ். மத்தியூஸ் வீதியில் நடைபெற்ற புனித அந்தோனியார் சிலை திறப்பு விழாவில் சிறப்புரை வழங்கிய திரு. ஐயா ஜோசப், 'தமிழ் மொழி இரக்கத்தின்மொழி, பக்தியின் மொழி, தமிழில் இறைஞ்சுவதை இறைவன் மிகவும் விரும்பி அருள் தருவான் எனத் தமிழ்ப் பக்தியாளர்கள் உறுதி கூறியுள்ளனர். ' என்று கூறினார்.

மரணம்

### J. M. இராஜரத்னம்

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் முன்னைநாள் முகாமையாளரும், தென் இந்திய திருச்சபை யாழ். பேராயத்தின் இணுவில், மானிப்பாய் மருத்துவமனைகளின் முன்னைநாள் செயலாளரும், காலஞ்சென்ற திரு. E. J. இராசரத்தினத்தின் மூத்த மகனும், இராசமலரின் அன்புக் கணவருமான ஜோன் மற்புரசிங்கம் இராஜரத்தினம் காலமானார்.

இவரின் இறுதிச் சடங்காராதனை கடந்த புதன்கிழமை 18ம் திகதி, பிற்பகல் 3.30 மணிக்கு, நல்லூர் திருச்சபைக் குரு, வண. ஆர்ச்டீக்கன் ஹெரிங்டன் அவர்களால், சுண்டிக்குழி சபைக் குரு வண. J. சர்வானந்தன், சேவக்சாம் அல்பிறட் அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது.

நல்லூர் தூய யாக்கோபு சபைக் கல்லறைத் தோட்டத்தில் இவரின் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

*EDITORIAL*

## Shadow and Substance

In the turbulent context of the time in which we live, we wonder if Children's Week should not be also a *Parents' Week*.

We often glibly speak of the children's behaviour and conduct when what really matters today is, in our view the parents' behaviour and conduct, as they influence their child.

The following story of a child about his father (a story we have taken from a foreign publication) illustrates a point which we often overlook, how much a child expects from his parent and how much the impact a parent has on the life of his child. We are reproducing the entire 'story' for the benefit of our readers:—

When I was a child, my father sometimes took me for walks in the late afternoon. We would wander down through the pasture, not hurrying. He would tell me the names of the trees, point out a bird's nest so well hidden that the careless eye would never see it. Sometimes, if the day was uncommonly warm, he would say to me, "*Walk in my shadow. I'll be your shade.*"

Even now, I recall how good it was to be a child, exploring the fields, becoming aware of the natural order of life, watching the miracles of the changing seasons, marveling at mysteries that even my father could not explain. I walked with him safe in his shadow, protected by the shade he provided me.

One day we discovered that I had grown too tall to fit into his shadow. We didn't speak of it. We just both knew that the time had come for us to walk side by side — each casting his own shadow.

Later still, I came to understand that *the shadow of my father was as it was because the man who cast it was who he was*: big enough, strong enough, wise enough to be my shelter till I was sufficiently strong to step outside and walk my own way.

My father gave me the best of himself, his shadow and his substance.

*Three* questions to which parents should try to find an answer are these:- How much of our time do we give exclusively for our children every week? Does the *shadow* we cast eventually become for the child his *substance*?

We recently read in the *Pathukavalan* (22-6-84) a news item which said that the Catholic Church has strongly protested against a move by the government in Singapore to give priority in school admissions to children of parents who are university graduates.

We endorse this protest. But what strikes us as more important is the thinking behind the move of the government that the child of an educated parent is bound to receive automatically at home a training and background which would make it easy for the school to make him or her a good citizen.

In this context the *third* question parents have to answer is:- As educated parents, have we sufficiently understood and appreciated this responsibility.

A sight we would like to see is a father taking a walk on a Sunday evening with his adult boy, talking to him and listening to him as both stroll side by side as the shadows of the evening fall about them.

"Children are not meant to be moulded" says a writer "but unfolded".

[The J. D. C. S. I. Children's Rally will be held at Uduvil on Saturday, 4th of August.]

*— Editor.*

## Seminar on TV and Violence

A Two-day Seminar on TV and Violence was held at the Sri Lanka Foundation Institute on July 14 and 15. State Minister Ananda Tissa de Alwis inaugurated the Seminar.

There were eleven papers presented under three headings (1) The Social Impact of Television (2) Televisions and Religions (3) Television, Leisure and Crime.

The first category included 'Television and Youth' and the last category included Television and Education.

## Uduvil YMCA Project

*The Uduvil YMCA* has launched on another Project in the village. On 2-7-84 at Mann's English School, Uduvil.

Lakspray packets and sugar have been made available to the school and teachers volunteer to prepare the milk and distribute it to the children at mid-day. Some 70 children are served every day.

The Uduvil YMCA is one of the oldest YMCAs in Jaffna. It is continuing with its Project started earlier of giving lunch packets to needy children on Sundays.

## Sri Lankan Banks Slash Interest Rates

*Banks of Ceylon* which paid 18.5 per cent on one year fixed deposits has, from 9-7-84, reduced the rate to 17 per cent. A three month fixed deposit which originally earned 15 per cent interest will now yield only 13 per cent and a six months interest only 15 per cent against the previous 15.5 per cent. A fixed deposit of Rs. 10,000 will now earn only 15.5 per cent if the interest is drawn monthly.

*The N. S. B.* has extended its one year fixed deposit to 18 months but will continue pay 20 per cent. But if the interest is to be paid monthly the rate will be 16.8 per cent. The new rates are operative from 2-7-84.

*The People's Bank* will continue its existing rates which are same as the new rates of the *NSB*.

## IMF and the Third World

The IMF Chief Jacques Larosiere has denied the allegation that the IMF was responsible for social unrest in the Third World. He has said that nations had often overvalued their currencies which hurt exporting farmers and protected the affluent who lived in cities.

## In Return to Free Education

Draft Legislation has already been prepared requiring all graduates of Sri Lankan Universities to serve the State in return for the facility of Free Education they have enjoyed.

The Degree Certificates will be awarded only after the obligatory period is over.

There is currently a shortfall of 588 doctors in the approved cadre of 2270 medical officers and a shortfall of 22 in cadre of 74 medical administrators.

A Spokeman of the GMOA commenting on this move of compulsory service has said that personally he does not think that is a solution for the brain drain.

*W. Music*

## Musical Dickens

Charles Dickens' *Nicholas Nickleby* the classic novel which criticised England's Educational system in the 19th century, has now been turned into a Pop Musical, entitled S-M-I-K-E, written by Roger Holman and Simon May. The English Cultural Union of Holy Family Convent, Bambalapitiya will present the 'pop' at Lionel Theatre from July 20 — 22.

The local Director is Jerome de Silva, choreo grapher of S-M-I-K-E.

*At Rest*

## Mr. P. G. Jeyaratnam

We regret to record the death which occurred on 6-7-84 at his residence in Colombo of *Mr. P. G. Jeyaratnam*, a senior member of the Colombo Church of the Diocese.

The Funeral Service was held on 7-7-84 at his residence, 6, Hildon Place, Bambalapitiya. Rev. J. J. Ratnarajah officiated. The tribute was paid by Mr. T. Thavarajah and the Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the JDCSI, preached the Sermon and pronounced the Benediction.

He leaves behind besides his wife, Packiam, three sons, one daughter, two brothers — Messrs. I. P. Thurairatnam and D. N. Selvaratnam and two sisters — Mrs. E. J. Rajaratnam and Mrs. A. H. Ariaratnam.

## Jaffna News in Brief

O *Dr. T. Mownaguru* is the first to obtain a Doctorate from the Jaffna University. He has been conferred the Doctorate on 14-7-84 on his researches in Batticaloa on "stylised Folk Drama". He conducted his Research under the guidance of the late prof. Kailasapathy who was his mentor. Another writer who was conferred a degree was *Mr. K. Gunarajah* who got his M. A. Degree.

O *Mr. Chellappah Ambihaipahan* J.P.U.M. Attorney at Law has been appointed a Regional Director of the Lions Club International. He was formerly the President of the Lions Club at Chavakachcheri and was largely instrumental in establishing a Home for Disabled and a Training Centre for youth at Chavakachcheri.

O *The Christian Teachers Guild* (Jaffna) held its Annual Relreal at the Christa Seva Ashram on 15-7-84. Rev. S. S. Arulambalam, Mr. A. R. Kadirgamar and Sevak Rev. Sam Alfred gave the main address.

O *Some 50 Passport Applications* are received everyday in Jaffna but they are sent only once in ten days by post.

O *By-Elections* — The position of the TULF is that the By elections proposed should not be held *in the North and East* till the APC finalists the scheme of Devolution to solve the Tamil problem.

O *At a Conference* held recently convened by Mr. D. Nesiah Government Agent Jaffna before he left for the States, the Kassippu menace and the animal sacrifice at temples were discussed. Mr. K. Nadarajah Chairman, Palmyra Development Board spoke of the impact of Kassippu manufacture and sale on the social and economic life in the areas where it is illicitly brieved.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 20th July 1984 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.